அசல் வழக்கு எண். 261/2022 வா.சா.2 ஜெயமணி த/பெ சின்னசாமி

**22.03.2024 குறுக்கு விசாரணை**

1. வாதி பூவரசன் என் மகன் ஆவார். பிரதிவாதி ஊருக்கும் எங்கள் ஊருக்கும் 7 கி.மீ. இடைவெளி உள்ளது. நான் பிஎஸ்.ஸி. படித்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . ஒப்பந்தம் போடப்பட்ட சொத்து வீடு மற்றும் நிலம் சேர்ந்ததாகும்.

2. வா.சா.ஆ.1 கிரயஒப்பந்தம் ரூ.4,00,000/-த்திற்கு போடப்பட்ட ஆவணம் ஆகும். 16.08.2019 அன்று வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 16.08.2019 தேதிக்கு முன்னர் பிரதிவாதி என்னிடம் கடனாக பணம் வாங்கினாரா என்றால் இல்லை. 2017ம் ஆண்டில் சொத்து விற்பதாக சொல்லி பணம் வாங்கினார்.

3. 2017 ம் ஆண்டு போடப்பபட்ட கிரய ஒப்பந்தம் என்பெயரில் போடப்பட்ட ஆவணம் ஆகும். அந்த ஆவணம் கிரய ஒப்பந்த ஆவணம் ஆகும். 2017ல் போடப்பட்ட கிரய ஒப்பந்தம் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்றால் அந்த நேரத்தில் பிரதிவாதி குறைந்த தொகைக்கு கிரய ஒப்ப்நதம் போட்டுவிட்டோம் என்று சொன்னதால் அந்த கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு புதிய தொகைக்கான கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ.1 முன்னிலைக்கு என் மகன் பெயரில் போடப்பட்டது.

4. 2017ம் ஆண்டில் போடப்பட்ட கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய தொகை ரூ.3,50,000/- ஆகும் முன் தொகையாக ரூ.3,00,000/-கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் கிரய தொகையாக ரூ.4,00,000/-போடப்பட்டது முன் பணம் ரூ.3,75,000/- என்றும் கொடுக்க வேண்டிய மீதி கிரய தொகை ரூ.25,000/- என்று இருந்தது.

5. 2017ல் கிரய தொகையாக ரூ.3,50,000/-மும் 2019ல் கிரய தொகையாக ரூ.4,00,000-மும் போடப்பட்டது என்று என்றும் இடைப்பட்ட காலத்தில் வழக்கு சொத்திற்கு ரூ.50,000/-தான் விலை ஏற்றம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வட்டிக்கு தான் பணம் வாங்கினார் என்றும் அதனால் தான் 2017ல் ரூ.3,50,000/- என்று ஒப்பந்தம் போடப்பட்டு பின்னர் 2019ல் வட்டியுடன் சேர்த்து ரூ.4,00,000/கிரய தொகையாக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி தற்போது வரை தாவா சொத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2019ல் கிரய ஒப்பந்தம் போடப்பட்டபோது ரூ.25,000/- பாக்கி கிரய தொகைக்கு எதற்காக 2 வருடம் கால அவகாசம் வழங்கப்பட்டது என்றால் அப்போது எங்களிடம் பணம் இல்லை. கொரோனா காரணமாக அந்த தொகையை பிரதிவாதிக்கு கொடுக்க இயலவில்லை.

7. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் நான் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். முதல்சாட்சியாக பிரதவாதியின் மகள் பரிமளா என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார். சார் பதிவளார் அலுவலகம் சென்றபோது நான் வெளியில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து போட உள்ளே சென்றேன்.

8. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் ஏற்கெனவே 2017ல் போடப்பட்ட கிரய ஒப்பந்தம் பற்றியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய தொகை பற்றியும் பின்னர்அந்த கிரய ஒப்பந்தம் ரத்து செய்து தான் வா.சா.ஆ1 கிரய ஒப்பந்தம் தயார் செய்ததாக சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. தாவாவில் எனது மகன் மேற்படி விவரங்கள் குறித்து சொல்லி உள்ளாரா என்றால் சொல்லி உள்ளார்.

9. வா.சா.ஆ,.1 கிரய ஒப்பந்தத்தில் ரூ.4,00,000/- கிரய தொகையாக போடப்பட்டுள்ளது என்றும் ஆனால் தாவா சொத்தின் சந்தை மதிப்பு ரூ.25,00,000/- என்றால் சொத்தின்

மதிப்பு எனக்கு தெரியாது கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படும்போது தாவாச் சொத்தின் மதிப்பு எதுவும் சொல்லப்படவில்லை.

10. பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்பதால் அவரை ஏமாற்றி அடமான பத்திரம் என்று சொல்லி வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பதிவு செய்து கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதிடம் படித்து காண்பிக்கப்பபட்டது. மேலும் பிரதிவாதியின் மகள் பரிமளாதான் வா.சா.ஆ.1ல் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்.

11. 2017ல் என்பெயருக்கு கிரய ஒப்பந்தம் போடப்பட்டு பின்னர் அது ரத்து செய்யப்பட்டு 2019ல் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் என் மகன் பெயரில் போடப்பட வேண்டிய காரணம் என்ன என்றால் எனக்கு வயதாகி விட்டது என்பதாலும், என் பெயரில் கிரய பத்திரம் இருந்தால் பின்னர் என் மகன் பெயரில் கிரய பத்திரம் பதிவு செய்யும்போது இரண்டு செலவுகள் தேவையில்லை என்பது தான் காரணம் ஆகும்.

12. 2017ல் ரூ.3,50,000/- கிரய தொகையாக குறிப்பிடப்பட்டு அந்த தொகை வட்டியுடன் சேர்த்து ரூ.4,00,000/-என்று வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த படி பாக்கி கிரய தொகையான ரூ.25,000/- கொடுப்பதற்கு 2 வருட கால அவகாசம் வழங்கப்பட்டது பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் என்றால் சரியல்ல.

13. படிப்பறிவு இல்லாத பிரதிவாதி வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை அடமான பத்திரம் என்று நம்பி கடன் வாங்கி அதன் பிறகு பிரதிவாதி மீது இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் கூட்டாக சேர்ந்து பொய்யான ஆவணம் தயார் செய்திருப்பதால் நிறைவீட்டு தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. வாதி என் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.